


**20.03.2025**

<u>தலைப்புச்செய்திகள்</u>

1. தொகுதி வரையறை பிரச்சனையில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை இன்று ஒத்திவைக்கப்பட்டன.

2. தமிழகத்தில் தனது அரசின் தோல்வியை மறைக்கவே தொகுதி வரையறை பிரச்சனையை நாடாளுமன்றத்தில் திமுக எழுப்புவதாக மத்திய அமைச்சர் திரு.பிரல்ஹாத் ஜோஷி குறை கூறியுள்ளார்.

3. விவசாயிகளின் நலனில் மத்திய அரசு அக்கறை கொண்டுள்ளதாக மத்திய வேளாண் இணை அமைச்சர் திரு.பஹிரத் சவுத்ரி தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் குற்றச்செயல்களை கட்டுப்படுத்த சட்டப்பூர்வ நடவடிக்கைகளை காவல்துறையினர் பாரபட்சமின்றி மேற்கொள்வதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

5. ஸ்விஸ் ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் பிரியான்ஷு ரஜாவத், கிடாம்பி ஸ்ரீகாந்த், சங்கர் சுப்பிரமணியன் ஆகியோர் இன்று களமிறங்குகின்றனர்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

<u>நாடாளுமன்றம்</u>

தொகுதி வரையறை பிரச்சனையில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் இன்று பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று கூடியதும் தொகுதி வரையறைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் திமுக, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அணிந்திருந்த உடை குறித்து மக்களவை தலைவர் திரு.ஓம்.பிர்லா ஆட்சேபம் தெரிவித்தார்.

சட்ட விதிகளுக்கு ஏற்ப மக்களவை செயல்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டிய அவர் அவையின் மாண்பை குறைக்கும் வகையில் சில உறுப்பினர்கள் செயல்படுவதாக குறிப்பிட்டார்.

விதிகளை மீறி உடை அணிந்து கோஷம் எழுப்பும் எதிர்கட்சி உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற அவைத்தலைவர் வலியுறுத்தினார்.

ஆனால் திமுக உள்ளிட்ட எதிர்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து கூச்சல் எழுப்பவே அவை தலைவர் முதலில் நண்பகல் வரையிலும், பின்னர் பிற்பகல் 2 மணிவரையிலும் மக்களவையை ஒத்திவைத்தார்.

மாநிலங்களவையிலும் இதே பிரச்சனை எதிரொலித்ததால் அவை 3 முறை ஒத்திவைக்கப்பட்டது.

***********

<u>பிரல்ஹாத் ஜோஷி</u>

தமிழ்நாட்டில் தனது அரசின் தோல்வியை மறைக்கவே திமுக தொகுதி வரையறை பிரச்சனையை நாடாளுமன்றத்தில் எழுப்புவதாக மத்திய அமைச்சர் திரு.பிரல்ஹாத் ஜோஷி குறை கூறியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் தென் மாநிலங்களுக்கு மத்திய அரசு அநீதி இழைக்காது என்று குறிப்பிட்டார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு பின்னரே தொகுதி வரையறை நடைமுறைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

இதனிடையே இந்த பிரச்சனையில் திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற வளாகத்தில் இன்று ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நியாயமான தொகுதி வரையறையை திமுக வலியுறுத்துவதாக அக்கட்சியின் உறுப்பினர் திருமதி கனிமொழி தெரிவித்துள்ளார்.

தமிழகம் உள்ளிட்ட தென்மாநிலங்களின் நலன்களை தொகுதி வரையறை நடவடிக்கைகள் பாதிக்கும் என்பதால் மத்தியஅரசு இப்பிரச்சனை குறித்து தெளிவான விளக்கம் அளிப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

***********

<u>பஹிரத் சவுத்ரி</u>

விவசாயிகளின் நலனில் மத்திய அரசு அக்கறை கொண்டுள்ளதாக மத்திய வேளாண் இணை அமைச்சர் திரு.பஹிரத் சவுத்ரி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் பிரதமரின் வேளாண் நிதி உதவி திட்டம், பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை போன்றவற்றை சுட்டிக்காட்டினார்.

பஞ்சாப் எல்லை பகுதிகளில் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளை அப்புறப்படுத்தியது பற்றி பேசிய அமைச்சர் இப்பிரச்சனையில் காங்கிரஸ் மற்றும் ஆம் ஆத்மி கட்சிகளை குறை கூறினார்.

மத்திய அரசு விவசாயிகளை அப்புறப்படுத்துவதாக எதிர்கட்சிகள் தெரிவிக்கும் குற்றச்சாட்டை அமைச்சர் மறுத்துள்ளார்.

முன்னதாக விவசாயிகளுக்கு ஆதரவாக காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற வளாகத்தில் இன்று ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்

***********

சிட்டுக்குருவிகள்

உலக சிட்டுக்குருவிகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இத்தினம் கொண்டாடப்படுகிறது.

தர்மபுரி மாவட்டத்தில் வனப்பகுதியை ஒட்டிய கிராமங்களில் சிட்டுக்குருவிகள் பெருமளவில் காணப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

ராணிப்பேட்டையில் சிட்டுக்குருவிகளை பாதுகாக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து எமது செய்தியாளர் தெரிவிக்கையில்

வாய்ஸ்

கோவையில் தமிழ்நாடு வனத்துறை, இயற்கை ஆர்வலர்கள் அமைப்பு சார்பில் சிட்டுக்குருவிகளை பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வு இன்று பொதுமக்களிடையே ஏற்படுத்தப்பட்டது.

***********

முதலமைச்சர்

தமிழகத்தில் எந்த இடத்தில் எந்தவிதமான குற்றச்செயல்கள் நடைபெற்றாலும் உரிய விசாரணை நடத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

பேரவையில் எதிர்கட்சி தலைவர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமியின் சட்டம் ஒழுங்கு தொடர்பான குற்றச்சாட்டிற்கு பதில் அளித்த பேசிய அவர் குற்றச்செயல்களை கட்டுப்படுத்தவும், குற்றங்கள் நிகழாமல் தடுக்கவும் உரிய சட்டப்பூர்வ நடவடிக்கைகளை காவல்துறையினர் பாரபட்சமின்றி எடுத்து வருவதாக குறிப்பிட்டார். அவர் தெரிவித்தார்.

அஇஅதிமுக ஆட்சியின்போது நடைபெற்ற கொலை உள்ளிட்ட குற்ற செயல்களை பட்டியலிட்ட முதலமைச்சர் அது தற்போது கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக கூறினார்.

கோவையில் நேற்று நடைபெற்ற சம்பவம் தற்கொலை என்றும்,

சிவகங்கையில் நடைபெற்ற கொலை குடும்ப தகராறு என்றும் தெரிவித்தார்.

மதுரை மற்றும் ஈரோட்டில் நடைபெற்ற கொலை சம்பவம் குறித்து காவல்துறை தீவிரமாக விசாரித்து வருவதாகவும் கூறினார்.

ஈரோட்டில் நடைபெற்ற கொலை சம்பவம் முன் விரோதம் காரணமாக நடைபெற்றதாக சுட்டிக்காட்டிய முதலமைச்சர் இதில் தொடர்புடைய குற்றவாளிகளை கைது செய்ய காவல்துறையினர் முயற்சித்த போது அவர்கள் ஆயுதங்களால் காவல்துறையினரை தாக்க முயற்சித்ததாகவும், எனவே அவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தியதில் 4 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக காவல்துறை தீவிர விசாரணை நடத்தி வருவதாகவும் விசாரணையின் முடிவில் அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுத்தரப்படும் என்றும் முதலமைச்சர் எடுத்துரைத்தார்.

***********

<u>கவனஈர்ப்பு – அஇஅதிமுக</u>

சட்டப்பேரவையிலிருந்து அஇஅதிமுக உறுப்பினர்கள் இன்று வெளிநடப்பு செய்தனர்.

பேரவையில் இன்று கேள்வி நேரம் முடிந்ததும் தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு பிரச்சனை குறித்து எதிர்கட்சி தலைவர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி கவன ஈர்ப்பு தீர்மானத்தை கொண்டுவந்து பேசுகையில் மாநிலத்தில் தொடர்ந்து பல கொலை குற்ற சம்பவங்கள் நடைபெறுவதாக குற்றம் சாட்டினார்.

இதற்கு பேரவை தலைவர், அனுமதி மறுத்தார்.

இதனிடையே எதிர்கட்சி தலைவரின் குற்றச்சாட்டிற்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் பதில் அளிக்க முற்படுகையில் அஇஅதிமுக உறுப்பினர்கள் அவையிலிருந்து சிறிது நேரம் வெளிநடப்பு செய்தனர்.

சிறிது நேரத்தில் அஇஅதிமுக உறுப்பினர்கள் அவைக்கு திரும்பினர்.

பின்னர் பேசிய பேரவைத்தலைவர் திரு.அப்பாவு எதாவது முக்கிய பிரச்சனை குறித்து அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பேசலாம் ஆனால் தேவையற்ற குற்றச்சாட்டுகளை அரசின் மீது தெரிவிப்பதை ஏற்க முடியாது என்றார்.

***********

<u>சட்டப்பேரவை கேள்வி நேரம்</u>

தமிழ்நாட்டில் உள்ள 375 ஊராட்சிகளை, அருகில் உள்ள மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளோடு இணைக்கும் முயற்சிகள் நடைபெற்று வருவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர் இந்த பகுதிகளில் இணைக்கப்படும் ஊராட்சிகளில் வாழும் மக்களுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் 100 நாட்கள் வேலை வழங்க அரசு முடிவுசெய்திருப்பதாக தெரிவித்தார்.

திருத்துறைபூண்டி நகராட்சி முதல்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்படும் என்றார்.

பொள்ளாச்சி நகராட்சியில் குடிநீர் குழாய்கள் இணைக்கும் பணியில் விடுபட்ட 15ஆயிரம் இணைப்புகளையும் விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

தஞ்சை திருவாரூர் நாகை ஆகிய மாவட்ட மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்குரிய பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும், அமைச்சர் கூறினார்.

***********

## சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது வெளியான மேலும் சில தகவல்கள்

பென்னாகரம் தொகுதி ஒகேனக்கல் - தர்மபுரி – திருப்பத்தூர் சாலையை நான்கு வழி சாலையாக மேம்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு கூறினார்.

வனத்துறையிடமிருந்து தடையில்லா சான்று கிடைக்கப்பெற்றதும் பணிகள் தொடங்கப்படும் என்றார்.

மாநகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்படும் மின் புதை வட கம்பிகள் அமைக்கும் பணிகள் முடிவடைந்ததும் நகராட்சி, பேரூராட்சி பகுதிகளிலும் புதை வட கம்பிகள் அமைக்கும் பணிகள் தொடங்கப்படும் என்று மாநில மின்சாரத்துறை அமைச்சர் திரு.செந்தில்பாலாஜி கூறினார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் 31 புதிய துணை மின் நிலையங்களும், விழுப்புரம் மாவட்டத்தில் 6, கள்ளக்குறிச்சியில் 3, காஞ்சிபுரத்தில் 1 கூடுதல் துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்றும், குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் அரசு பணிகளில் தற்காலிகமாக பணியாற்றும் மாற்றுதிறனாளிகளை நிரந்தர அரசு ஊழியர்களாக்கி காலமுறை ஊதியத்திற்குள் கொண்டுவர அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் பேரவையில் தெரிவித்துள்ளார்.

இதற்கென ஆயிரத்து 200 பணியிடங்கள் கண்டறியப்பட்டு மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு தேர்வு நடத்தப்படும் என்றும், இந்த கூட்டத்தொடருக்குள் தேர்வு தேதி அறிவிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

தமிழ்நாட்டில் 208 நகர்புற நல வாழ்வு மையங்களில் கூடுதலாக தேவைப்படும் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் விரைவில் நியமிக்கப்படுவார்கள் என்று மாநில மருத்துவ மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே புதிதாக தொடங்கப்பட்ட 500 நகர்புற நலவாழ்வு மையங்கள் உரிய மருத்துவர்களுடன் செயல்பாட்டிற்கு வந்திருப்பதாக எடுத்துரைத்தார்.

கோவை சூலூர் தொகுதி செஞ்சேரிமலை அருள்மிகு மந்திரகிரி வேலாயுதசுவாமி திருக்கோவில் அருகே சுமார் ஒருகோடி ரூபாய் செலவில் திருமண மண்டபம் கட்டும் பணிகள் 3 மாதங்களில் தொடங்கும் என்று மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு கூறினார்.

***********

## நீதிமன்றம்

டாஸ்மாக் சோதனை விவகாரத்தில் வரும் 25ஆம் தேதிவரை அமலாக்கத்துறை எந்த நடவடிக்கையும் எடுக்க கூடாது என சென்னை உயர்நீதிமன்றம் இன்று உத்தரவிட்டது.

அமலாக்கத்துறை அதிகாரிகள் டாஸ்மாக் அலுவலகங்களில் சோதனை நடத்தியதற்கு எதிராக டாஸ்மாக் தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிமன்றம், பல்வேறு கேள்விகளை எழுப்பி விளக்கங்களை கோரியது.

இதனை தொடர்ந்து இந்த வழக்கு விசாரணை வரும் 25ஆம் தேதிக்கு ஒத்திவைத்த நீதிமன்றம் அமலாக்கத்துறை விரிவான பதில் மனுவை அன்றைய தினம் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

அதுவரை டாஸ்மாக் அதிகாரிகள் மீது அமலாக்கத்துறை எந்தவித நடவடிக்கையும் எடுக்க கூடாது என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

***********

<u>மீனவர்கள்</u>

இலங்கை சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட 13 தமிழக மீனவர்கள் இன்றுகாலை சென்னை வந்தடைந்தனர்.

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி கடந்த ஜனவரி 27ஆம் தேதி சிறை பிடிக்கப்பட்ட நாகை, மயிலாடுதுறை, காரைக்காலை சேர்ந்த இம்மீனவர்கள் இருநாட்டு தூதரக அதிகாரிகளின் பேச்சுவார்த்தைக்கு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்..

சென்னை வந்த மீனவர்களை மாநில மீன்வளத்துறை அதிகாரிகள் சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைத்தனர்.

இதனிடையே இலங்கை கடற்படையினர் துப்பாக்கி சூட்டில் காலில் காயம் ஏற்பட்டுள்ள காரைக்கால் மீனவர் மட்டும் சென்னை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

***********

<u>போக்குவரத்து காலிப்பணியிடம்</u>

தமிழ்நாட்டில் உள்ள 8 போக்குவரத்து கழகங்களில் காலியாக உள்ள 3 ஆயிரத்து 274 ஓட்டுநர், நடத்துனர் பணியிடங்களுக்கு நாளைமுதல் விண்ணப்பிக்கலாம் என அரசு அறிவித்துள்ளது.

அடுத்த மாதம் 21ஆம் தேதிவரை **arasubus.tn.gov.in** என்ற இணையதளத்தில் தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.

***********

<u>போதை பொருள் பறிமுதல்</u>

அரியலூர் மாவட்டம் ஆன்டிமடம் அருகே கூவத்தூர் கிராமத்தில் விபத்திற்குள்ளான கார் ஒன்றில் அரசால் தடை செய்யப்பட்ட பல லட்சம் ரூபாய் பெருமான 500 கிலோ குட்கா பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இந்த காரின் உரிமையாளர் தொடர்பான தகவல்கள் குறித்து போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

***********

<u>பேட்மிண்டன்</u>

பேசிலில் நடைபெறும் ஸ்விஸ் ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில்:

பிரியான்ஷு ரஜாவத் - ஃபிரான்சின் டோமா-வையும்,

கிடாம்பி ஸ்ரீகாந்த் - சீனாவின் லீ ஷீ.ஃ.பெங்கையும்

சங்கர் சுப்பிரமணியன் - டென்மார்க்கின் ஆண்டன்சென்னையும் இன்று எதிர்கொள்கின்றனர்.

பிற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்களில்

மகளிர் ஒற்றையர் பிரிவில் அனுபமா உபாத்யாயாவும்,

மகளிர் இரட்டையர் பிரிவில் ட்ரிசா ஜாலி, காயத்ரி கோபிசந்த் இணையும்

கலப்பு இரட்டையர் பிரிவில் சதீஸ் கருணாகரன் - வரியாத் ஆதியா இணையும் இன்று களம் காண்கிறது.

***********

<u>பாரா விளையாட்டு</u>

2ஆவது கேலோ இந்தியா பாரா விளையாட்டு போட்டிகள் புதுதில்லியில் இன்று தொடங்குகின்றன.

36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்து ஆயிரத்து 300 தடகள வீரர்கள் பல்வேறு பிரிவுகளில் இதில் பங்கேற்க உள்ளனர்.

வரும் 27ஆம் தேதிவரை இப்போட்டிகள் நடைபெறும்.

***********

<u>டென்னிஸ்</u>

ஃப்ளோரிடாவில் நடைபெறும் மியாமி ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா, குரேசியாவின் இவான் இணை – இந்தியாவின் யூக்கி பாம்பரி, போர்ச்சுகலின் நூனோ இணையை நாளை எதிர்கொள்கிறது.

***********

<u>ஐ.பி.எல்</u>

18ஆவது ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டிகள் நாளை மறுநாள் தொடங்குகின்றன.

கொல்கத்தாவில் நடைபெறும் முதல் போட்டியில் நடப்பு சேம்பியன் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருவை எதிர்கொள்கிறது.

சென்னை சூப்பர் கிங்ஸ் தனது முதல் போட்டியில் வரும் ஞாயிற்றுக்கிழமை சென்னையில் - மும்பை இண்டியன்ஸுடன் மோதுகிறது.

இறுதிபோட்டி கொல்கத்தாவில் மே 25ஆம் தேதி நடைபெறும்.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது